# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2039/28 - 2017 ඔක්තෝබර් මස 04 වැනි බදාදා - 2017.10.04

*2039/28 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 5/2011* (ii)

**2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொது வழிகள் சட்டம்**

*86 ஆம் பிரிவின்கீழான கட்டளை*

*2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொது வழிகள் சட்டத்தின் 86 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், கீழே குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2014, நவெம்பர் 14 ஆந் திகதிய 1888/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அணுகுகை வீதிகளிலிருந்து தவிர தேசிய நெடுஞ்சாலை ஒன்றாக அல்லது அத்தகைய நெடுஞ்சாலையின் ஏதேனும் பாகமாக வெளிப்படுத்தப்பட்டதான பிலியந்தல துணைப்பாதைக்கு அல்லது துணைப்பாதையிலிருந்து பொதுமக்களின் அணுகுகையை இக்கட்டளையால் மட்டுப்படுத்துகின்றேன் :*

(1) பிலியந்தல துணைப்பாதை நெடுகிலும் நெற்காணி மற்றும் தாழ்நிலப் பிரதேச மீட்பைத் தடுத்தல் ; அத்துடன்

(2) அதிகாரமற்ற அணுகுகை இணைப்புக் காரணமாக பிலியந்தல துணைவழிப்பாதையின் உற்பத்தித் திறன் குறைப்பைத் தடுத்தல்.

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

பத்தரமுல்ல,
*2017, ஒற்றோபர் 02.*

*10-616*


1A - PG 3715 — 107 (2017/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*